**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 95** **நாள்: 15.04.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகள் இன்று (15.04.2026) நடைபெற்றது. இதில் பெரம்பூர் மற்றும் ஆர்.கே. நகர் பயிற்சி மையங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் 23.04.2026 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. சென்னை மாவட்டத்தில் 975 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 4,085 வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். இந்த வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள 19,604 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான (Presiding Officer, Polling Officer-1, Polling Officer-2 and Polling Officer-3) முதற்கட்ட பயிற்சி வகுப்பு 28.03.2026 அன்று வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பு இன்று (15.04.2026) கீழ்கண்ட 17 மையங்களில் நடைபெற்றது.

**அதன் விவரம் ;**

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | பயிற்சி மையம் |
|---|---|---|
| 1. | 11. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,<br>எண். 183, ஏ ஏ ஸ்கீம் சாலை, காமராஜர் சாலை,<br>இராதாகிருஷ்ணன் நகர்,<br>சென்னை-81 |
| 2. | 12. பெரம்பூர் | டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி<br>எண். 45, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை<br>வியாசர்பாடி, சென்னை-39 |
| 3. | 13. கொளத்தூர் | சென்னை உயர்நிலைப்பள்ளி<br>எண். 38-42 பந்தர் கார்டன்,<br>சென்னை-11 |
| 4. | 14. வில்லிவாக்கம் | ஐ.சி.எப். உயர்நிலைப்பள்ளி<br>ஐசிஎப் காலனி, விடுதலை குருசாமி நகர்<br>சென்னை-38 |

| | | |
|---|---|---|
| 5. | 15. திரு.வி.க.நகர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர்,<br>சென்னை-14 |
| 6. | 16. எழும்பூர் | சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி<br>எண்.3, இராட்லர் தெரு, சென்னை-112 |
| 7. | 17. இராயபுரம் | புனித பீட்டர் உயர்நிலைப்பள்ளி,<br>எண்.18, மேற்கு மாதா சர்ச் சாலை, இராயபுரம்,<br>சென்னை-13 |
| 8. | 18. துறைமுகம் | பாரதி மகளிர் கல்லூரி,<br>எண்.1, பிரகாசம் சாலை, பிராட்வே சாலை,<br>ஸ்டான்லி மருத்துவமனை அருகில், ஜார்ஜ் டவுன்,<br>சென்னை-600 001. |
| 9. | 19. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி | என்.கே. திருமலைச்சாரியார் பெண்கள்<br>மேல்நிலைப்பள்ளி<br>டாக்டர் பெசன்ட் சாலை, சேப்பாக்கம், சென்னை-5 |
| 10. | 20.ஆயிரம் விளக்கு | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>ராஜாஜி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை-600 034, |
| 11. | | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>பள்ளிச்சாலை, நுங்கம்பாக்கம்,<br>சென்னை-34 |
| 12. | 21. அண்ணாநகர் | டி ஜி வைஷ்ணவா கலைக் கல்லூரி,<br>ஈ.வெ.ரா. பெரியார் சாலை,<br>அரும்பாக்கம்,<br>சென்னை-106 |
| 13. | 22. விருகம்பாக்கம் | மீனாட்சி பொறியியல் கல்லூரி,<br>எண்.12, வேம்புலியம்மன் கோயில் தெரு,<br>கே. கே.நகர் மேற்கு,<br>சென்னை-78 |
| 14. | 23. சைதாப்பேட்டை | அரசு ஆண்கள் கலைக்கல்லூரி<br>எண்.329, அண்ணா சாலை, நந்தனம்,<br>சென்னை-35 |
| 15. | 24.தியாகராயநகர் | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி<br>எண்.13, 54வது தெரு, 9வது அவென்யூ,<br>அசோக் நகர், சென்னை-83 |
| 16. | 25. மயிலாப்பூர் | இராணி மெய்யம்மை பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>எண்.162, ஆர்.கே.மட் சாலை, மந்தைவெள்ளி,<br>சென்னை-28 |
| 17. | 26. வேளச்சேரி | சென்னை மேல்நிலைப்பள்ளி,<br>பாரதிதாசன் தெரு, திருவான்மியூர்,<br>சென்னை-41 |

இதில் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் பயிற்சி பெற்ற அலுவலர்கள் மூலம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி வகுப்புகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் (VVPAT) ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து செயல்முறை விளக்கம் மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு முந்தைய நாள் மற்றும் வாக்குப்பதிவு நடைபெறும் நாளில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

இதில் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காமராஜர் சாலையில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வியாசர்பாடி, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் உள்ளடாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.04.2026) பார்வையிட்டு, ஆய்வு செய்து, பயிற்சியில் வழங்கப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளை வாக்குச்சாவடி அலுவலர்கள் பின்பற்றி சிறப்புடன் தேர்தல் பணியினை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு தபால் வாக்கினை பதிவு செய்வதற்கு வசதியாக பயிற்சி நடைபெற்ற 17 மையங்களில் தபால் வாக்கு பதிவு மையம் அமைக்கப்பட்டு, தபால் வாக்குப்பதிவு பணி இன்று நடைபெற்றது.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**